நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மேட்டூர்.

## CC. No.39/2025

## P.W.8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சபாபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | PW 8 |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், ஜூலை மாதம், 13 –ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.47 PM

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திரிபுவனத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025ம் தேதி நான் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காவலர் பாலசுந்தர் என்பவர் கொடுத்த புகாரினை பெற்று

கருமலைக்கூடல் காவல் நிலைய குற்ற எண்.17/2025, பிரிவு 296(b), 121(i), 351(3) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்து புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அரசு தரப்பு சான்றாவணம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 12.01.2025ம் தேதி 20.15 மணிக்கு சம்பவயிட சாட்சிகளான தமிழரசன் மற்றும் அருண்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பார்வை மகஜர் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மாதிரி வரைப்படம் அரசு தரப்பு சான்றாவணம் அ.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சம்பவயிட சாட்சிகளான முதல் நிலை காவலர் பாலசுந்தர், சிறப்பு உதவி ஆய்வாளரான பரமசிவம், வைத்தியலிங்கம், தேவகண்ணன் ஆகியோரை சம்பவயிடத்தில் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 12.01.2025ம் தேதி 21.30 மணிக்கு வீரக்கல்புதூர் பஸ் ஸ்டாப் அருகில் எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து 22.00 மணிக்கு காவல் நிலையம் அழைத்து வந்தேன். பின்னர் எதிரியை அன்றையதினமே நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் மேட்டூர் அரசு மருத்துவமனையில் விசாரணை செய்து மருத்துவர் பிரசாந்த் என்பவரிடமிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்று 19.01.2025ம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கு சம்மந்தமாக காவல் நிலையத்திற்கு தகவல் கடந்த 12.01.2025ம் தேதி மாலை 07.45 மணிக்கு கிடைக்கப்பெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்பவத்தில் போலீசார் கனகாம்பாள் என்பவர் கொடுத்த புகாரினை விசாரிக்க தான் சம்பவயிடத்திற்கு சென்றார் என்றால் சரிதான். அந்த வழக்கு குற்ற எண்.18/2025 ஆக பதிவாகியுள்ளது என்றால் சரிதான்.

2. குற்ற எண்.18/2025 சம்மந்தப்பட்ட புகாரில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரம் 12.01.2025ம் தேதி இரவு 11.00 மணிக்கு தகவல் கிடைத்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 12.01.2025ம் தேதி மாலை 6.45 மணிக்கு புகார்தாரரின் கணவர் மற்றும் அவரது மகன் காவல் நிலையத்திற்கு ஆஜராகி தகவல் சொன்னதன் பேரில் புகார்தாரர் சம்பவயிடத்திற்கு சென்றதாக உள்ளது என்றால் சரிதான்.
3. காவல் நிலையத்திற்கு12.01.2025ம் தேதி 19.45 மணிக்கு தகவல் கிடைத்ததாக முதல் தகவல் அறிக்கையில் முதல் பக்கத்தில் மூன்றாம் பத்தியில் தகவல் கிடைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில் முதல் தகவல் அறிக்கையில் இரண்டாம் பக்கத்தில் 12.01.2025ம் தேதி மாலை 06.45 மணிக்கு வைத்தியலிங்கம் என்பவர் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் காவல் நிலையத்திற்கு உண்மையில் தகவல் கிடைத்த நேரம் என்னவென்றால் மாலை 06.45 மணிக்கு வைத்தியலிங்கம் என்பவர் குற்ற எண்.18/2025 வழக்கு சம்மந்தமாக வாய் மொழியாக தகவல் கூறினார். அதன் அடிப்படையில் போலீசார் சம்பவயிடத்திற்கு போகும் போது ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக நடைபெற்ற சம்பவத்தினை பொறுத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்டவாறு 19.45 மணிக்கு தகவல் கிடைக்கப்பெற்றதாக கூறப்பட்டுள்ளது.
4. இந்த வழக்கின் புகார்தாரர் காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளித்த பின்பு தான் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். புகார்தாரர் எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தது (7.45 PM மணிக்கு) 19.45. இந்த வழக்கின் புகார்தாரர் இரவு 11.35 மணிக்கு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். எத்தனை நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தார் என்றால் அடுத்தநாள் மாலை 05.00 மணிவரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார்.
5. அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். குற்ற எண்.18/2025 என்ற வழக்கில் இரவு 11.00 மணிக்குதான் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த புகாரை எங்களது நிலைய காவலர் பாலசந்திரன் என்பவர் மாலை 07.45 மணிக்கு விசாரிக்க சென்றார் என்பது

நம்பத்தகுந்ததாக இல்லை என்றால் சரியல்ல. அவசர உதவி எண்.100 க்கு தகவல் வந்தால் புகார் பெறாமலேயே நாங்கள் சம்பவயிடத்திற்கு போவோம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையிலும், இறுதியறிக்கையிலும் அவசர உதவி எண்.100 க்கு கொடுத்த தகவலின் அடிப்படையில் முன்னதாக சம்பவயிடத்திற்கு சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அவசர உதவி எண்.100 க்கு தகவல் எதுவும் கொடுக்கப்படவில்லை. நான் வழக்கமான நடைமுறையை பற்றி சொன்னேன். இந்த வழக்கில் வாய்மொழி தகவலின் அடிப்படையில்தான் சம்பவயிடத்திற்கு சென்றோம்.

6. இந்த வழக்கின் புகார்தாரர் பாலசந்தர், மற்றும் அ.சா.2 ஐ எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்துதான் 12.01.2025 ம் தேதி விசாரித்தேன். அ.சா.4 முதல் அ.சா7 வரை உள்ள சாட்சிகளை எங்கு வைத்து விாசரித்தேன் என்றால் 12.01.2025 ம் தேதி சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் அ.சா.4 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் தங்களது நீதிமன்ற சாட்சியில் போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்று சொல்லியிருந்தார் அது தவறு.

7. இந்த வழக்கின் எதிரியை இரவு நேரத்தில் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரிப்பதற்காக காவலர்களை அனுப்பினேன் என்றாலும இந்த வழக்கின் எதிரி இரவு நேரத்தில் காவல் நிலையத்திற்கு வரமுடியாது என்றும் காலை காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகிறேன் என்று சொல்லியிருந்தால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரும் ஆஜர் எதிரியை வலுக்கட்டாயமாக காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி கூப்பிட்டு அவர் வரமுடியாது காலையில் வருகிறேன் என்று சொன்ன காரணத்தினால் அவரை பிடித்து இழுத்ததனால் அவர் கீழேவிழுந்து அவரது வலதுக்கையில் அடிப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரி அ.சா.1 ன் மீது புகார் அளித்துவிடுவார் என்று பயந்து அவர்மீது தவறுதலாக புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

8. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறாததால்தான் மாலை 07.45 மணிக்கு புகார் அளித்துவிட்டு இரவு 11.45 மணிக்கு அ.சா.1 மருத்துவமனையில்

உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில்வைத்து அனைத்து ஆவணங்களையும் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.20 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்

**நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர்.**